DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C.No. 253 /2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W.5 |
| Name | :கார்த்திக் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.06.2023

-----

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் தொட்டப்பநாயக்கனூரில் குடியிருக்கிறேன். நான் கொத்தனாராக வேலை பார்க்கிறேன். கடந்த 01.12.2019 காலை 10.00 மணி அளவில் நான் என் வீட்டில் இருந்த போது எனது வீட்டிற்கு முன்புறம் உள்ள அ.சா.1ன் வீட்டில் அழுகை சத்தம் கேட்டது. சத்தம் கேட்டு நான், இரகுபதி, முத்துச்சாமி, லட்சுமணன் ஆகியோர் வீட்டின் மாடிக்கு சென்ற போது சிங்கமும், அமுதாவும் அழுது கொண்டிருந்தார்கள். அப்போது சிங்கம் மகன் பாலாஜி வீட்டு மாடியில் தூக்குபோட்டு தொங்கி கொண்டு இருந்தார். அப்பொழுது நாங்கள் 4 நபர்களும் தூக்கல் தொங்கிய பாலாஜியை கீழே இறக்கினோம் அப்போது எந்த பேச்சு மூச்சும் இல்லாமல் இருந்தார். இது சம்மந்தமாக அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். இறந்த பாலாஜியின் உடலை மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார்கள். இறந்த பாலாஜியின் உடலை அன்றைய தினம் மருத்துவ பரிசோதனை முடிந்து எரித்தார்கள். மறுநாள் வீட்டை சுத்தம் செய்யும் போது அழுகை சத்தம் கேட்டது. பிறகு ஒரு நோட்டு கிடைத்தது அந்த நோட்டில் என்

சாவிற்கு காரணம் இரவி என்று எழுதப்பட்டிருந்தது. அதன்பின்பு போலீசில் அ.சா.1 மேற்படி கடிதத்தை ஒப்படைத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

மறுநாள் அஸ்தி கரைக்க நான் செல்லவில்லை. முதல் நாள் அ.சா.1உடன் நான் காவல் நிலையம் சென்றேன். என்னிடம் சாட்சி கையெழுத்து எதுவும் பெறவில்லை. அ.சா.1ன் மகள் தர்சினி நோட்டுப்புத்தகத்தை வைத்து மக்கள் மத்தியில் காண்பித்து கொண்டிருந்தது என்றால் சரிதான். என்னைப்போன்று நிறை நபர்கள் அந்த நோட்டுப்புத்தகத்தை பார்த்தனர். எனக்கு அவ்வளவாக எழுதப்படிக்க தெரியாது என்றால் சரிதான். நான் தர்சினி நோட்டை காண்பித்து அழுது கொண்டிருக்கும் போது நேரம் காலை 10 மணி இருக்கும். மறுநாளும் நான் காவல்நிலையத்திற்கு அ.சா.1உடன் சென்றேன். இரவிச்சநத்திரன் ஆசிரியர் என்ற வாசகம் எழுதப்படவில்லை என்றால் சரிதான். இரவி என்று எழுதப்பட்டு இருந்தது. அ.சா.1 எனக்கு மாமா முறை வேண்டும் என்றால் சரிதான் அதனால் மறுநாள் காலை 10.00 மணிக்கு அ.சா.1ன் மகள் தர்சினி ஒரு நோட்டை எடுத்ததாகவும், அந்த நோட்டில் என் சாவுக்கு காரணம் இரவி என்று எழுதப்பட்டிருந்ததாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை.**

/*sd*/Thiru.P.S.ரஸ்கின் ராஜ், 09.06.2023
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல்/

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.